நம்மாழ்வார் சரித்திரம்

வேலூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்
எழுதியது

வேலூர்
சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது

1913

[*All rights reserved*]

விலை அணா இரண்டு

நம்பாடுவான் சரித்திரம்

(கைசிகமாஹாத்மியம்)

இது

வேலூர் வூர்ஹீஸ் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால்

எழுதப்பட்டது.

வேலூர்

சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

[காபிரைட் ரெஜிஸ்டர் செய்தது]

பிரமாதீச வருஷம்

விலை அணா இரண்டு

ஸ்ரீ

காப்பு

வாழ்வெல்லாங் கைகூட மன்னியவெந் தாழ்வெல்லாம்
வீழ்வுறவெந் நாளும் விருப்பத்தாற்—சூழ்குவாம்
மாயன் குணம்பரவி மாண்பவிர்நம் பாடுவான்
தூயன் னவன்கழல்க டாம்.

ஸ்ரீ

நான்முகம்

திருமகள்கொழுநனும், ஸ்ரீவைகுண்டநிகேதனனும், நித்தியர்களாலும் முக்தர்களாலும் அநுபவிக்கப்படுபவனும், அந்தமிலா ஆனந்தத்தோடு கூடியவனும், பேரருளுடையவனும், ஸர்வ காரணபூதனும், ஸர்வசக்தியோடுங் கூடியவனும், முற்றுமுணர்பவனும், நித்யவிபூதி லீலாவிபூதி என்னும் இரண்டிற்கும் இறைவனும், எங்கும் பரந்துள்ளவனும், வீடுபேற்றை அளிப்பவனும், சேதன அசேதனங்களைச் சரீரமாகவுடையவனுமாகிய ஸர்வேச்வரன், வேற்றுநாடு சென்றிட்ட மைந்தன்பக்கல் தந்தையிதயம் கிடக்குமாறுபோல, லீலாவிபூதியாகிய இவ்வுலகில் இறகு ஒடிந்த பறவைபோல் ஸம்ஸாரமாகிய பெருங்கடலிலே வீழ்ந்து நோவுபட்டு மந்தமதிகளாயிருக்கிற சேதனர்களுடைய இழவைக் கருதித் திருவுள்ளம் ஊன்றி, இவர்கள் தன்னைப் பற்றி உய்ந்திடுதற்காக, பிரளயங்கொண்ட ஸ்ரீ பூமிப்பிராட்டி வியாஜமாக, தான் அவதரித்துப் பண்ணின விபவங்களில் மிகச் சீரிய நல்லறிவுதரும் உபகாரகுணமுடைய வராஹரூபியாய் எல்லாவுலகத்திற்கும் தந்தையாகத் தான் அவதரித்து, அந்தப் பிரளயப்பெருங்கடலினின்று எல்லாவுலகங்கட்கும் தாயான ஸ்ரீபூமிப்பிராட்டியை எடுத்துவைத்தவிடத்திலும் அவள் தன்துயரம் தீரப்பெறுமல், ஸம்ஸாரப்பெருங்கடலில் அகப்பட்டுத் தவிக்கும் தன் பிரஜைகளான சேதனர்கள் தாம் உஜ்ஜீவிக்கச் செய்தற்கு எளிய ஓர் உபாயம் காணுமையால், "பிரஜைகள் தேவரீர் திருவடிகளைப் பற்றுதற்கு எளிதான ஓர் உபாயம் அருளிச்செய்யவேணும்" என்று விண்ணப்பம்செய்ய, ஸ்வாமி அவளைப் பார்த்து இசையுருவமான உபாயத்தை அருளிச்செய்பவராய், ஒருவன் இந்தக் கானரூபமான உபாயத்தைப் பற்றி வீடுபெற்றபடியை இப்புராணமுகத்தால் அருளிச்செய்தார் என்பது, இந்தச்சரித்திரத்தின் வரலாறு.

இந்தத் திவ்விய சரித்திரம், வடமொழியில் ஸ்ரீவராஹ புராணத்தில் ஸ்ரீ வராஹ பூமி ஸம்வாதத்தில் உள்ளது. இது, கைசிகோபாக்கியானம் என்று பெயர்பெறும்; கைசிக புராணம், கைசிகமாஹாத்மியம், நம்பாடுவான்சரித்திரம் என்றும் வழங்கப்படும். இதற்கு, ஸ்ரீ பராசர பட்டர் என்ற ஆன்றோர் ஸம்ஸ்கிருதபதங்களும் தமிழ்மொழிகளும் விரவிவர மணிப்பிரவாளரூபமாக மிகச்சிறந்த வியாக்கியானம் அருளிச்செய்துள்ளார். மேற்குறித்த வடநூலையும் அதன் வியாக்கியானத்தையும் பெரும்பாலும் தழுவிச் சிற்சில இடங்களில் தகுதியாகச் சிற்சில கூட்டி எளிய தமிழ் நடையில் இந்தச்சரித்திரம் என்னால் எழுதப்பட்டது. இதில் ஆன்றோர்களுடைய பாசுரங்களும் வாக்கியங்களும் ஆங்காங்கு இனிமைதரும்பொருட்டுச் சேர்க்கப்பட்டுள்ளன.

நம்பாடுவான்சரித்திரத்தில், "ஜாதிபற்றியே உயர்வு தாழ்வு கருதலாகாது. நீசஜாதியானாயினும், நற்குண நல்லொழுக்கமும் தெய்வபக்தியும் உடையோன் பெரியவன்; உயர்ந்தஜாதியனெனினும், அவை இலனேல் கீழோனே" என்பதும், "அறங்களெல்லாவற்றினும் முதன்மையானது வாய்மை; அதனைத் தன்னுயிர்க்கு இறுதி வந்தவளவினும் கைசோரவிடாமல் உறுதியாகப் பற்றிநிற்றல்வேண்டும்" என்பதும், "பாகவதர்களைச் சரணமடைதல் ஸகலபாப நிவிருத்திக்கும் காரணம்" என்பதும் முதலிய அரிய பெரிய நீதிகள் புலப்படலாம்.

அறிவுடையோர் இச்சிறுவசனநூலிலுள்ள ஸாராம்சங்களையே பாராட்டிப் பற்றி, அஸாரமான குற்றங்களையும் குறைகளையும் பாராட்டாது புறக்கணித்துவிட்டு என்னை அபிமானிப்பர் என்னும் துணிபுகொண்டு இந்நூல் என்னால் வெளியிடப்பட்டது.

வேலூர்
பிரமாதீச(ஞு)
வைகாசிமீ 25உ.

பு. க. ஸ்ரீ.

ஸ்ரீ

கடவுள் துணை.

நம்பாடுவான் சரித்திரம்

புண்ணியபூமியாகிய பரதகண்டத்தில் தென்றிசையில் பேருலகளந்த திருமாலேபோல் வானுறவோங்கிய மகேந்திரமென்றொரு பர்வதம் பிரஸித்தமாகவுள்ளது அங்கு, க்ஷீரநதியென்றொரு சீரிய யாறு தென்கடல்நோக்கிச் செல்கின்றது. அதன் தீரத்தில் திருக்குறுங்குடியென்னும் ஒப்பற்ற திவ்வியதேசம், விசித்திரமான கோபுரம் பிராகாரம் விமானம் மண்டபம் கர்ப்பக்கிருகம் முதலியனவுடைய திருமாலின் திருக்கோயிலாலும், அகழி சூழ்ந்த மாடகூட கோபுரங்கள் அழகாக அமைந்த அரையர்களின் அரண்மனைகளாலும், ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயானது திருநடமிடும் செல்வர்களின் சீரிய செம்பொன்செய் மாளிகைகளாலும், தெங்கு நிரைநிரையாக ஓரங்களிலுடையவையாய் "இரவியின்கதிர்கள் நுழைதல்செய்தறியாத*" விசாலமான வீதிகளாலும், தாமரைமுதலிய நறுமலர்கள் தயங்கும் வளமுள்ள குளங்களாலும், மா பலா வாழை முதலிய பலவிருட்சங்கள் விளங்கப்பெற்றுக் "குயிலொடு மயில்கள் நின்றாலும்" † பொழில்களாலும், குரவம் சண்பகம் பாதிரி முதலிய மணமலர்மரங்கள் மலிந்த பூஞ்சோலைகளாலும் அலங்கரிக்கப்பெற்றுப் பொலிவுற்றது.

---

* பெரியதிருமொழி, இரண்டாம்பத்து, மூன்றாந்திருமொழி, எ.

† ஷை ஷை ஷை

அங்கு, யாழ் முதலிய இன்னிசைக்கருவிகளின் ஒலியோடியன்ற திவ்வியப்பிரபந்தத்தின் இசை எப்போதும் செவிக்கு நல்விருந்தூட்டும். மகரயாழினின்றும் எழுப்பிய இனிய ஸ்வரங்கள் வண்ணம் விளங்குகின்ற வாய்ப்பாட்டுடனே ஒத்து விளங்குவன. அப்பொழுது முழவுகள் ஒலிப்பன. அவ்விசையைக் கேட்டு மெய்ம்மறந்து, மகளிரோடு பேசுந்தன்மையுள்ள கிள்ளைகள் கண்முகிழ்த்து உறங்குவன. அந்நகரத்தில் வளைகளின் ஒலியும், ஊதுகொம்புகளின் ஓசையும், மகரயாழின் இனங்களின் இசையும், மத்தளங்களின் சத்தமும், கின்னரமென்னும் இயத்தின் தொனியும், வேய்ங்குழல் சின்னம் முதலிய துளைக்கருவிகளின் நாதமும், மற்றும் பலவகை வாத்தியங்களின் ஆரவாரமும் கடலின் கோஷமும் கீழ்ப்படும்படி விம்மும்.

காளமேகங்களும் திரைக்கடலும் ஒலியைக் கேட்டு உட்குமாறு நாடோறும் வார்முரசங்கள் அதிர்கின்ற பெரிய அத்திருக்குறுங்குடி நகரில் வாழ்கின்ற மனிதர்களுள் கள்வார் எவரும் இல்லாமையால் பொருட்காவலுமில்லை. யாதுங் கொள்வாரில்லாமையாற் கொடுப்பார்களுமில்லை. *

" கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவைவல்ல ரல்லாரு மில்லை
யெல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு மெய்தலாலே
யில்லாரு மில்லை யுடையார்களு மில்லை மாதோ. " †

ஆங்குள்ள கல்விக்கழகங்கள் கணக்கற்றன. அக்குறுங்குடி நகரில்,

---

* கம்பராமாயணம், பாலகாண்டம், நகரப்படலம், எஅ.

† ௸ ௸ ௸ எச.

" வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
வஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன—கஞ்சங்
கலங்குவன மாளிகைமேற் காரிகையார் கண்கள்
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு."

அத்தலத்திற்குக் குரோசதூரத்தில் புலையர்சேரி யொன்றுண்டு. அது, வெள்ளெலும்புகளும் நரம்புகளும் ஆங்காங்குக் கிடக்கப்பெற்ற புன்செய்களின் இடையே உள்ளது. சுரை பூசணி முதலிய கொடிகள் படர்ந்தடர்ந் திருக்கும் கூரைவீடுகள் செறிந்தது. அந்தக் குடிசைகளைச் சுற்றி நாய்கள் எப்போதும் குரைத்துக்கொண்டிருக்கும். இறைச்சியின்மீது நசையால் பருந்துகளும் கழுகுகளும் காக்கைகளும் அவ்வீடுகளுக்குமேல் அணியணியாகப் பறந்து வட்டமிட்டு ஒலஞ்செய்யும். பலவகைக் கோழிகள் கூவிக்கொண்டிருக்கும். அச்சேரி, இத்தகைய இன்னாத வொலிகளாற் குழப்பமுற்றதுபோன்றிருக்கும். கோழி பன்றி நாய் முதலிய பிராணிகளின் மலம் சூழ்ந்திருக்கும். "புன்புலால்நாற்றம் சேயார்முகத்துச்சென் றறைக்கும்." † நெட்டி மிதந்திடுஞ் சிறுநொய்ப்பாசிபடர்ந்தகுட்டைகளிற் சிறுமீன்களும் நண்டுகளும் நத்தைகளும்ஆமைகளும் வலத்துக் குடியிருக்கும் புலைச்சாதி யிளஞ்சிறார் அக்குட்டைகளைக் கலக்கி மச்சங்கள் நண்டுகள் முதலியவற்றைப் பிடித்து நசுக்குவார்கள். கேணிகள் தோல்கள் ஊறி அழுகப்பெற்றவை. அவற்றினின்று எழும் தூர்க்கந்தம் மிக்க அருவருப்பைத் தரும். ஆங்காங்கு வெள்ளெருக்குப் பூத்திருக்கும். பாம்புகள் அடிபட்டிறந்துகிடக்கும். மனைப் புறங்களிலும் வயற்புறங்களிலும் கோழி கொக்கு முதலிய

* நளவெண்பா, சுயம்வரகாண்டம், ௪௫.

† நீதிநெறிவிளக்கம், ௬௫.

பறவைகளின் சிறகுகளும் என்புகளும் நரம்புகளும் தோற் கிழிகளும் பரந்திருக்கும். குரம்பைகளில் சிறுமீன்கள் தோரணங்களாகக் கோத்துக் கட்டப்பட்டு உலர்ந்து கொண்டிருக்கும். இப்படிப்பட்டவற்றை அங்குள்ளார் ஈன மெனக் கினைப்பதுமுண்டோ? அன்னார் தீபாவளிதினத்தன்றி மற்றைத்தினத்திற் குளித்தறியார். அவர்கள் கள் சாராயம் முதலியன பருகித்தெருவிற் போந்து தந்தனப்பாட்டுக்கள் பாடிக் களித்து விளையாடுவார்கள்; புன்கங்காய் இலுப்பை மணி ஆகிய இவற்றை நெருக்கமாகக் கோத்து அரையிற் சுந்தரமான பொன்ஞாணெனக் கட்டிக்கொண்டிருப்பார் கள்; பிசாசுமரம், மரமல்லிகை, இண்டை ஆகிய இவற்றின் பூக்களைச் சிங்காரமாகச் சிரத்திற் சூடுவார்கள்; பாசிமணி கள் கோத்த தாழ்வடங்களை மார்பிற் பூண்டிருப்பார்கள். அவர்கள் வாய், உலர்த்திப் பொசுக்கிய மீன்றுணிக்கை, கேழ்வரகிடியன்மா, பனட்டெட்கொம்பு, கம்பு முதலிய வற்றை எப்போதும் அரைத்துக்கொண்டு, இடைவிடாது வேலைசெய்யும் இயந்திரமென இருக்கும் சாதாரணமாகச் சுடுகாடுகள், "துக்கத்துள் தூங்கித் துறவின்கட் சேர்கலர், மக்கட் பிணத்த;" "புலன்கெட்ட விப்புல்லறிவாளர் வயிறே, தொக்க விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே." * அவர்கள் அவாவுடன் மதுவையருந்திக் கஞ்சாவை உண்டு கூட்டங்கூட்டமாகக் கூடிப் பறைமுழக்கிக் கெக்கலிகொட் டிச் சிலசமயங்களிற் சண்டையிடுதலுஞ் செய்வர். ஆண்மக் களும் பெண்மக்களும் முறைதவறி மானமின்றித் தம்மிற் கூடுவர்; கைகோத்தாடுவர்; பொய்ச்சூதாடுவர்; ஒருதினத்தில் அளவிறந்த சோஹத்தி செய்வர். கைகொட்டுதலும் விலா விலும் வாயிலும் அடித்துக்கொள்ளுதலும் அவர்களுக்குச் சந்தோஷக்கூத்தில் இன்றியமையாதன. அன்னார்,

---

* நாலடியார், தீவினையச்சம, க.

"அருளி விசயமு செறியில சரிசமு மழுகி லுருவமு மதிர்குரற்
பொருளிலுரைகளு முடையர் முழுதுடல்புலவுகமழ்தருபொறியினர்
மருளு நரியொடு கழுகு தொடர்தர வலிய பிணநுசர் சுவையரா
திருளின்மிசையிருபிறைகளெனவளையெயி றுங்கலவெழுமிதழினர்."*
அவர்களது சேரியின் இழிவையும் மறத்தையும் அநாகரிகத்தையுங்குறித்து மற்றும் வெளியிடவேண்டுவதுமுண்டோ?

இத்தகைய சண்டாளர்சேரியில், பாபவம்சத்தில், சேற்றிற் றாமரையுதித்தாற்போல், ஞானமும் அறநெறியிலூற்றமும் ஸர்வேச்வரனிடத்துப் பத்தியும் வைராக்கியமும் பூண்டுள்ளமையாற் பூதேவரென்னத்தக்க ஒருவன் அவதரித்திருந்தான்.

"தாமரை பொன் முத்துச் சமரங் கோரோசனை பால்
பூமருதேன் பட்டுப் புனுகு சவ்வா—தாமழுன்மற்
றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலு மென்." †

"கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றி
லொள்ளரிதாரம் பிறக்கும் பெருங்கடலுட்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார் யார்
நல்லாள் பிறக்குங் குடி." ‡

திருத்துழாய் பரிமளத்தோடு அங்குரிக்குமாறுபோல், அவன், கல்விகேள்விகளின்றியே இயற்கையிலேயே இங்ஙனம் ஞான பத்தி வைராக்கியங்களைப் பூண்டவனாய்த் தோன்றினன். வீச்சுடன் சேற்றில் விழுந்தாலும் உடலில்

---

* வில்லிபுத்தூரார் பாரதம், வேத்திரகீயச்சருக்கம், ௪௦.

† நீதிவெண்பா.

‡ நான்மணிக்கடிகை, ௬.

மாசுருத பிள்ளைப்பூச்சியேபோல், அவன், புலையர்களது தீச்செயல்களின் இடையில் இருப்பவனேனும், இம்மை மறுமை வீட்டின்பங்களை அளிக்கும் முதல்வனான முகுந்தனும் அத்தனைத் தனது சித்தத்தில் நித்தமும் வைத்து உத்தம பத்திபெற்றுச் சுத்தனாயிருந்தான். அவன் ஸர்வேச்வரன் போல் எல்லாவுயிர்களிடத்தும் மிக்க அருள் சுரக்கும் நெஞ்சத்தவன்.

"தாயொக்கு மன்பிற் றவமொக்கு நலம்பயப்பிற்
சேயொக்கு முன்னின் றொருசெல்கதி யுய்க்கு நீரா
னேயொக்கு மென்னின் மருந்தொக்கு நுணங்கு கேள்வி
யாயப் புகுங்கா லறிவொக்கு மெவர்க்கு மன்னான்." *

இத்தொல்லுலகில் அவன் ஒரு சிறந்த பாகவதன். அவன், அறமானது கோடிகோடிஜன்மங்கள் குற்றமறத் தவஞ்செய்து அவதாரமடைந்த ஒருமூர்த்தியோ என்னத் தக்க நல்லவன்; ஸ்ரீமந்நாராயணனது திருக்கல்யாண குணகணங்களை நினைந்துநினைந்து உள்ளங்கசிந்து உருகும் ஆர்வமுடையவன். அவன் பேரின்பத்தைக் கொள்ளைகொண்டுண்ணப் பிறந்தானேயாவன். அவன் தூரத்தில் இருக்கத்தக்க பாபஜாதியிற் பிறந்தவனாதலால், மேற்குறித்த திருக்குறுங்குடியில் திருக்கோயில்கொண்டுள்ள நம்பியென்னுந் திருநாமமுடைய திருமாலின் திருக்கோயிலை அணுகக் கூசி அத்திவ்யதேசத்தை அநுதினம் வலஞ்செய்வான்; அப்பொழுது, எம்பெருமானது திருக்கோயிலை அணுகுதற்குத் தடையாகிய தனது புலைக்குலத்தைக்குறித்து எண்ணியெண்ணி நெஞ்சம் புண்ணாகிப் புலம்புவன். ஸ்ரீயःபதியான ஸர்வேச்வரன் சிந்தைகுளிர்ந்து மகிழ்ந்திடும்படி, திவ்விய

* கம்பராமாயணம், பாலகாண்டம், அரசியற்படலம், ௪.

தேசங்களிலெல்லாம், மத்தளம் பேரிகை முதலிய வாச்சியங்களுக்கு இசைந்த போர்வைத்தோல்களையும், விசிவார்களையும், யாழ் முதலிய கருவிகளுக்குத் தந்திரிகளையும், வாசம் பெருகும் கோரோசனையையும் ஆர்வத்தோடு ஸமர்ப்பிப்பான். அவன், திருக்குறுங்குடிக் "கொற்றவன்முற்றுலகாளி" * யைக்குறித்து இசைபாடவேணுமென்று சங்கற்பித்து ஜாகரவிரதநிஷ்டனாய், மேலும், ஸர்வேச்வரனிடத்துப் பக்தியோடு பிராஹ்மமுஹூர்த்தமாகிய வைகறையில் எழுந்துசென்று, தன்சாதிக்கேற்றபடி அத்திவ்யதேசத்துக்குச் சேய்மைக்கண் நின்று நம்பியைக்குறித்து இசைபாடுவான். அவன் கடைச்சாதியிலே பிறந்திருந்தும், நாராயணகுணாநுஸந்தானத்தைப் பண்ணிப் பக்தனாய் இங்ஙனம் ஈரைந்தாண்டு இசைபாடி, உஜ்ஜீவித்தற்கு உரிய நெறி கிடைத்ததை உன்னி உள்ளம் உவகை பூப்பப்பெறுவான்; தண்டன்ஸமர்ப்பித்தெழுந்து சிரமேற் கரங்களைக் குவிப்பான்; இருகண்களினும் ஆனந்தநீர் அருவிபோலச் சொரியப்பெறுவன்; உடல் புளகிப்பான்; திருவீதியிலுள்ள தொண்டரடிப்பொடியை முடிமேல் அணிவான்; அங்ஙனம் அணிந்து வெகுநேர்த்தியென்று அகமகிழ்வான்; தேகம் பரவசமாவன்; இத்திவ்யதேசத்திலுள்ளார் வெகுபாக்கியசாலிகளென்பான்: திசைநோக்கித் தொழுவான்; உள்ளம் நெக்குநெக்குருகக் கண்ணீர் கடல்போலக் கரைபுரள அழுவான்; கீழேவிழுவான்; புழுதியிற் புரளுவான்; நெடிது வெம்மையாக உயிர்ப்பான்; சகம்பிர்ப்பான்; 'நான்மறைகளையும் உணர்ந்த அந்தணர் முதலிய உயர்ந்தசாதியாராகிய மேன்மக்கள் உறைதரும் இந்த ஸ்தலத்தில் இந்தப்பேயன் இருப்பது தக்கதன்று: நானோ புலையன்; தீவினையேன்; எம்

* பெரியதிருமொழி, ஒன்பதாம்பத்து, ஐந்தாந்திருமொழி, ௧௦.

பெருமாளை ஆதரத்தோடு ஸேவிக்கப்பெறாத படுபாவி; நாயேன் இப்புனிதஸ்தலத்தைப் பார்ப்பதும் சிறன்றே!' என்று ஏங்குவான்; தனது நீசஜன்மத்தை நினைத்து வெட்கித் தலைகுனிவான்; வாய்குழறி உரை தடுமாறுவன்; "நாராயணாவோ! மணிவண்ணா! நாகணையாய்! வாராய் என் ஆரிடரை நீக்காய்" * என்று வாய்வலிக்கச் சொல்வான்; கைவலிக்கக் கொட்டுவான்; கால்வலிக்கக் கூத்தாடுவான்; அனல்கண்ட மெழுகதுபோல் உள்ளம் உருகுவான்; ஒருமுகூர்த்தம் சித்திரப்பாவைபோல் கண்ணசையாமல் வாயசையாமல் உடலசையாமல், அலையடித்தோய்ந்த கடல்போல அமைந்து தன்னை மறந்திருப்பான். இப்படியே ஸேவித்துவந்த இவன், நம்பாடுவானென்று எம்பெருமானால் திருநாமமிடப்பெற்றவன்.

இவன் பின்பொருகால் கார்த்திகைமாதத்துச் சுக்கில பக்ஷத்து ஏகாதசியன்று இரவு ஒருயாமத்துக்குமேல் பிராணிகளெல்லாம் உறங்கினவளவில் தான் ஜாகரவிரதநிஷ்டனாதலால் உணர்ந்திருந்து, திருக்குறுங்குடி நம்பிக்கு இசைபாடுவதாகக் கையும் வீணையுமாய்த் தன்வீட்டினின்று புறப்பட்டான். இங்ஙனம் இவன், "கூத்த னிமையவர்கோன் விரும்புங் குறுங்குடி" † யைக்குறித்து வருநெறியிடையில், கோரரூபியாகிய ஒரு பிரமரக்ஷஸின் கையில் அகப்பட்டான். அந்தப் பிரமராக்கதன் ஊன்மிசைந்து உடல்பருத்துக் கொழுத்தவனாதலால் பலவானாயிருந்தான். நம்பாடுவான் திருமாலை நினைந்துநினைந்து நைந்து உள்ளங்கரைந்து உருகுபவனாதலால் துர்ப்பலனாயிருந்தான். நம்பாடுவான்

* சிறிய திருமடல், கண்ணி, ௫௦.

† பெரிய திருமொழி; ஒன்பதாம் பத்து, ஐந்தாந் திருமொழி, ௧

அந்தணச்சாதியானல்லாமையால் ஒரு வேதவாக்கியத்தைச் சொல்லி விடுவித்துக்கொள்ள மாட்டாதவனுமிருந்தான்; பலவானும் பராக்கிரமவானுமல்லாமையால் புலபராக்கிரமங்களைக் காட்டி விடுவித்துக்கொள்ளவும் இயலாதவன். அப்போது பிரமராக்கதனாற் பிடிக்கப்பட்ட அவன், ' சக்கரத்தண்ணலே!' என்று தாழ்ந்து கண்ணீர்ததும்பத் திருக்குறுங்குடிநம்பிபக்கல் ஸர்வபாரத்தையும் இட்டு அசைவற நின்றான்.

இங்ஙனம் அசைவறநின்ற அந்த மாதங்கனாகிய நம்பாடுவான் பிரமரக்ஷஸைப் பார்த்து, "சிற்றஞ்சிறுகாலே வந்து" * ஸர்வேச்வரனைச் சேவித்துப் பாடிப் பறைகொள்ளப்போகிறவனாயிருக்கும் என்னை விடுக" என்று இனிதாக இசைத்தான். நம்பாடுவானது இந்தவுரையைக் கேட்டும் அந்தப் பிரமரக்ஷஸ் ஒருமறுமொழியுங் கூறாதே உதாசித்து மிகக் குரூரமாக நின்றது. இங்ஙனம் கோபாக்கிராந்தனாய் நின்று மேல்விழுந்துவருகிற பிரமராக்கதனை நோக்கி மீளவும் நம்பாடுவான், "இவ்வாறு நீ என்மீது ஓடிவந்து செய்ய விருப்பது யாது?" என்று வினவினான். அதற்குப் பிரமரக்ஷஸ் தன்பசியாலே மனுஷ்யமாம்ஸத்தில் நசையுடையதாய், " நிகரிலவன்புகழ்பாடிப்பிளைப்பிலம் " என்றபடி, நீ பத்து ஸம்வற்சரம் போக்கியனான † ஸர்வேச்வரனைப் பாடி யிளைப்பற்றுத் திரிகின்றாய்; நானோ பத்துநாளாகப் பட்டினியேயிருந்து இளைப்புற்றுத் திரிகின்றேன். ஆதலால்

---

* திருப்பாவை, உக.

† "உண்ணும்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையு மெல்லாம், கண்ணன் எம்பெருமான்" என்ற திருவாய்மொழியையுங் காண்க.

எனக்குத் தைவம் பக்ஷணமாக வழியிலே கற்பித்துவைத்து வந்த நின்னை நான் விடுவேனா? உன்னை விடுவதில்லைகாண்; உன்னுடலிலுள்ள உறுப்புக்களைத் தனித்தனியே பிரித்து ஊன் உதிரம் முதலியவற்றைக்கொண்டு தேவதாராதனம் பண்ணி என் பசி தீர்த்துக்கொண்டு விரும்பியஇடம் செல்வேன்'' என்று கோரமாகக் கூறிற்று.

நம்பாடுவான் இங்ஙனம் கூறிய பிரமராக்கதனது வார்த்தையைக்கேட்டு, சரீரஹானிபர்யந்தமான விபத்து வந்தவளவிலும் அறிவுகுன்றாமல் திருமால்பக்கல் பக்தியதிசயத்தால் உறுதியுற்றவனாய், எம்பெருமானுக்கு இசை பாடவேணுமென்கிற ஆசையாலே அந்தரக்ஷஸை அநுவர்த்தித்து, "மகாபாகனே! உண்மையுரைக்கின்றேன்; நீ கேள்: நீ கழறியவாறு உனக்கு நான் உணவாகக்கடவேன். விதிகற்பித்தவாறு செய்யவேண்டியது அவசியமே. அது எனக்குச் சம்மதமே. ஆயின், எனக்கு ஒருநியமம் உண்டு; ஸர்வேச்வரனை யுகப்பிக்கும் ஜாகரவிரதமொழிய மற்றொரு உத்தமமான நோன்பு முண்டு; அதனையும் முடித்து நான் மீளவும் நின்னிடம் வருகின்றேன்: அப்போது நீ என்னை உனக்கு உணவாகக் கொள்க. ஸ்ரீமந் நாராயணனைக்குறித்து நான் ஏறிட்டுக்கொண்ட நோன்பிற்கு இடையூறுறாமல் நீ இரட்சிக்கவேணும்; இந்த ஜாகர விரதம் நிறைவேறினவாறே நின் விருப்பதிற்கேற்ப என்னை உணவாகக் கொள்ளுதி'' என்று இனிதாகவுரைத்தான்.

பசியாலே இளைத்திருக்கிற பிரமராக்ஷதன் இதனைக் கேட்டு, இவன் பதறாமல் சாந்தமாகவும் இனிதாகவும் வார்த்தைசொன்னதனால் தானும் இனிதாக, "அடே சண்டாள! உன் சாதிக்கீடாகவே யிருந்தது நீ உரைத்த சொல்!

போய் மீண்டு வருகின்றேனென்று நீ நேராகச் சொல்வது அசத்தியமே. எவன் இராக்கதன்முகத்தினின்றும் தப்பிப் போய் மீண்டு அதன்கையில் வந்து அகப்படுகின்றவன்? இவ்வழியொழியப் பலவழிகளும் உண்டு; இந்நாடொழியப் பன்னாடுகளும் உண்டு; உன்னுடைய நாட்டைவிட்டு வேற்றுநாட்டைக்குறித்துப் போவதாகவன்றோ விசாரிக்கின்றாய்? தம் சரீரவிநாசம் பிறக்குமிடத்தைத் தாம் அறிந்திருக்கச்செய்தேயும் அவ்விடத்தைக்குறித்து யாரேனும் ஒருவர் வருவாரும் உண்டோ? ஊனையுடையேனாகிய என்கரத்திலே அகப்பட்டுத் தப்பிப்போக மீண்டு வருகின்றேனென்று நேராகவே பொய்ம்மையுரை புகன்றாய்' என்றான்.

நம்பாடுவான் இதனைக் கேட்டு அறத்தொடுபொருந்தவும் இனிதாகவும் கூறுவான்:— "முன்னைவினைக்குற்றத்தால் இந்தக் கடைச்சாதியிற் பிறந்தேனாகினும் பரமாத்மஜ்ஞானமுண்டானதனால் ஒருமனிதனுக்கு உண்டான கருத்து எனக்கும் உண்டுகாண். ஆதலால் எனது மொழியை அமைதியொடும் கேளாய்: எவ்வுலகத்திற்கும் இறைவனை ஸ்ரீமந்நாராயணனைத் திருப்பள்ளியெழுச்சிபாடி யுணர்த்திக் கைக்கொண்ட விரதம் முடித்துத் திரும்பி நின்னிடத்து வருதற்கு உற்ற பலபிரதிஜ்ஞைகளைப் பண்ணிக்கொடுக்கின்றேன்: உலகமுண்டானதும் ஸத்தியத்தாலே; உலகம் நிலைநிற்கின்றதும் ஸத்தியத்தினாலே. ஆதலால் யான் மெய்ம்மையுரைத்திடுமத்தனைபோக்கி அஸத்தியம் ஒருகாலும் உரையேன். பிரமராக்ஷதனே! எனது சூளுரையைக் கருத்தூற்றுக் கேட்டி: எவனொருவன் எந்தநன்மைக்கும் ஏதுவான சத்தியத்தைத் தப்புகின்றானோ அவனது பாபத்தை அடைந்தவனாகின்றேன், மீளவும் வந்திலேனா

கில். எவனொருவன் காமனுக்காளாகி அவனாற் பீடிக்கப் பட்டு "மற்றொருவர்க்காய் மனைவாழுந்தாரம்" * கொள் கின்றானோ அவன்பாபத்தை எய்தியவனாகின்றேன், நான் மீட்டும் வந்திலேனாகில். உண்ணுமளவில் தனக்கும் தன் பக்கலுள்ளார்க்கும் பாகபேதத்தை எவனொருவன் அறிந்து பண்ணுகின்றானோ அவன்குற்றத்தை உறக்கடவேன், மீண்டு இங்கு வந்திலேனாகில். அந்தணனுக்குப் பூமிதானம் பண்ணி மீளவும் அதனை வாங்குகின்றான் யாவனொருவன் அவனது தீவினையைப் பொருந்தக்கடவேன், மீண்டு வந் திலேனாகில். திருமகளைப்போல் ரூபவதியும் நல்லாளுமான மாதை யௌவனகாலத்தில் அநுபவித்துப் பின் அவளுக்கு அதிகமாகக் குற்றத்தை அறைகின்றான் யாவனொருவன் அவன்பாபத்தை அனுபவிக்கின்றேன், திரும்பி வந்திலே னாகில். எவனொரு இருபிறப்பாளன் சிராத்தம்பண்ணி அன்றே மிக்ககாதலால் ஸ்திரீயைச் சேர்கின்றானோ அவன் பாபத்தை உறக்கடவேன், நான் மீட்டும் இங்கு வந்திலே னாகில். யாவனொருவன் பிறனுடைய அன்னத்தை நன்றாக உண்டு, பின்பு அருளும் நன்றியறிவும் இன்றி அவனைப் பழிக்கின்றானோ அவன்தீவினையை அடையக்கடவேன், மீளவும் நான் வந்திலேனாகில். யாவனொருவன் கன்னிகை யைக் கொடுக்கின்றேனென்று வாக்குதத்தஞ்செய்து பின் னர்க் கொடுக்காது மறுக்கின்றானோ அவன்மறத்தை உறக் கடவேன், மீள வந்திலேனாகில். எவன் ஒருவனுக்கு ஒன் றைக் கொடுக்கின்றேனென்று உறுதியுரைத்துப் பின்பு "நசையழுங்க நின்றோடிப்போய்" க்கின்றானோ "செய்ந் நன்றிகொன்றாரிற் குற்ற" ‡ முடையவனாகிய அன்னான்

* கம்பராமாயணம், ஆரணியகாண்டம், மாரீசன்வதைப்படலம், கஅ௩.

‡ நாலடியார், மெய்ம்மை, க.

கதியை யான் அடைந்தவனாகின்றேன், மீளவும் நான் வந்திலேனாகில். ஷஷ்டி அஷ்டமீ ஏகாதசி அமாவாஸ்யை சதுர்த்தசீ முதலிய புண்ணியதிதிகளில் நீராடாமல் உண்ணுபவர் யாவர் அவர்க்கு நேருந் தீக்கதி எனக்கும் உறுக நான் மீண்டு இங்கு வந்திலேனாகில். மிக்கநன்றிபுரிபவனாகிய நண்பனது காதலியைக் காமபாணத்தாற் பரவசனாய் எவன் மருவுகின்றானோ அவன் தீவினையை உறக்கடவேன், யான் மீளவும் வந்திலேனாகில். யாவர் மறுமைப்பேற்றிற்கும் வீடுபேற்றிற்கும் காரணனான தங்கள் ஆசாரியனது பத்தினியையும், இம்மையில் இரட்சிக்கும் இராசனது இல்லாளையும் காமத்தினாலே மோஹித்து அணைகின்றார்களோ அவர்களது துர்க்கதியை எய்தக்கடவேன், மீளவும் நான் வந்திலேனாகில். யாவனொருவன் மகளிரிருவரை மணம் புரிந்துகொண்டு ஒருத்தியை உபேக்ஷித்து மற்றொருத்தியை நேசித்து மகிழ்ச்சியுடன் மருவுகின்றான் அவன்கதியை உறக்கடவேன், யான் திரும்பி வந்திலேனாகில். சரணமடையத்தக்க மற்றோரிடமில்லாதவளும், "திருவினு நல்லாளும்" * "கற்புடைத் தன்பு முடித்து நாண் மெய்பூசி, நற்குண நற்செய்கை பூண்டா" † ளுமாகிய பாரியையை யௌவனத்திற் கைவிடுகின்றான் யாவன் அவன்தீவினையை எய்தக்கடவேன், மறுபடியும் நான் வந்திலேனாகில். மிக்க நீர் வேட்கையால் மிகவருந்திப் புனல்பருகுதற்கு விரைந்தோடும் ஆனினத்திற்கு ஜலபானத்தில் இடையூற்றைச் செய்திடுகின்றான் யாவனொருவன் அவன்பாபம் எனக்கு எய்துக, நான் வராவிடின். பிரமஹத்தி, கள்ளுண்டல், பொன்னைக் களவாடல், பொய்யுரைத்தல், குருவைநிந்தித்

---

* நீதிநெறிவிளக்கம், அ0.

† ஷை அக.

தல், * கொண்டநோன்பை இடையே கைவிடுதல் முதலிய தீமையை இழைத்திடுகின்றார் யாவர் அத்தகைய பதிதர்களுக்குப் பெரியோர்களால் எந்தக்கதி சொல்லப்படுகின்றதோ அந்தக் கொடியது எனக்கும் எய்துக, நான்வாராவிடில். யாவர் ஸ்ரீயஃபதியும், ஆச்ரிதர்களுக்குஎளியவனும், "எள்ளுமெண்ணெயும்போல், நீங்கா துலகத் துயிர்க்குயிராகி நியாமகனு, யோங்காரமா யத னுட்பொரு ளாய் நின்ற வொண்சுட" † ராகிய வாசுதேவனை ஆராதனம் பண்ணமல் இதர க்ஷுத்ரதைவங்களை வழிபடுகின்றார்களோ அவர்களுடைய துர்க்கதியை எய்தக்கடவேன், யான் மீளவும் வந்திலேனாகில். யாவரினும் உயர்ந்தவனும், எங்கும் வியாபித்துக் கரந்துறைபவனும், வேள்விமுதலிய காரியங்களால் தொழப்படுகின்றவனும், வீடடைய விரும்புகின்றவர்களால் வழிபடப்படுகின்றவனும், மோட்சத்தை அளித்தருள்பவனும், முக்தர்களால் அடையப்படுகின்றவனுமாகிய ஸர்வேச்வரனையும், "காணிலும் உருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார், பேணிலும் வரந்தர மிடுக்கிலாத தேவ" ‡ ராய்க் கருமபரவசரான இதரதேவதைகளையும், ஒருநிகராகப் புத்திபண்ணுகின்றான் எவனொருவன் அவனைப்போல் பாபியாய் நித்தியஸம்ஸாரியாகக்கடவேன், மீளவும் நான் வந்திலேனாகில்."

இங்ஙனம் சபதம்பண்ணின சண்டாலனை நம்பாடுவானைப்பார்த்துப் பிரமராக்கதன் மகிழ்வுற்றுநமஸ்கரித்து, 'நீ அறக் கடுகிச்சென்று கொண்டநோன்பைத் தலைக்கட்டி மீண்டு வந்திடுக' என்று மதுரமாகச் சொன்னான்

* பிரமஹத்திமுதலாகவுள்ளவை பஞ்ச மஹாபாதகமாம்.
† திருவரங்கத்துமாலை, ௬.
‡ திருச்சந்தவிருத்தம், ௬௯.

இராக்கதனால் விடப்பட்ட சண்டாலன், ஸம்ஸாரத்தினின்று முக்தன் மீண்டு வருமாறுபோல் மகிழ்ந்து, "கொண்டன் மணிநிறவண்ணர் மன்னும்" * திருக்குறுங்குடியின் புறத்தே வந்துநின்று, முன்புபோலப் பக்தியினால் மெய்ம்மறந்து, இருகண்களினின்று ஆனந்தநீர் அருவியெனச் சொரிய நம்பியைக்குறித்துப் பலபண்களை இனிமையாகப் பாடி, இறுதியிற் கைசிகமென்னும் பண்ணை யாழிசையோடு கண்டத்திசை இனிதாகச் சேரத் தேவருங் கேட்டுருகப் பாடுவான்:—

தேவர்க் கரிய திருவார் நிமலக்
கோவிக்குறுங்கைக் குடியா னென்னே!
கோவிக்குறுங்கைக் குடியா னவனிப்
பாவி யகத்தும் பதிந்தா னென்னே!

ஓங்கி யுலகை யுவந்தே யளந்தான்
ஈங்குக் குறுங்கை யிருந்தா னென்னே!
ஈங்குக் குறுங்கை யிருந்தா னெளியேன்
பாங்கி னுளத்தும் பதிந்தா னென்னே!

எண்ணற் கரிய வெழில்சேர் கமலக்
கண்ணன் குறுங்கை கலந்தா னென்னே!
கண்ணன் குறுங்கை கலந்தான் கடையேன்
எண்ணுங் கருத்தி லிருந்தா னென்னே!

இங்ஙனம் அவன் இனிதாக இசைபாடியபோது தருக்களும் சலிக்கவில்லை. முந்நீர்ச்சலதியும் ஒலிக்கவில்லை. பொருப்பினின்று இழிகின்ற அருவிக்காலும் நதிகளும்

* பெரியதிருமொழி, ஒன்பதாம்பத்து, ஐந்தாந்திருமொழி, ௫.

புரண்டு துள்ளவில்லை. பகுத்தறிவில்லாத விலங்குகளும் பறவைகளும் அறிஞனொருவன் தீட்டிவைத்த சித்திரமே யொத்தன.

"குறித்தமுகில் பந்தரிட்டுக் குறுந்துளிதூற் றிடவாயர்
தறித்தமா மத்தனையுந் தழைத்தலர்ந்து பழுத்துதவக்
கடம்புலிக ளயர்ந்துசித்ர காயமெனும் பெயர்விளக்கக்
கொடும்பணிகண் மாலையதாய்க் குலரத்ந விளக்கேற்றக்
கருங்கற்றூன் வெண்ணெயெனக் கரைந்தோட விரைந்தோடி
வருங்கற்றூ னிமைப்பொழிய மழவிடையங் கயர்ந்துநிற்ப" *

கண்ணபிரான் இசைத்த வேய்ங்குழலின் இசையேபோல நம்பாடுவான் பாடிய கைசிகப்பண் சேதனாசேதனங்களை யெல்லாம் உருக்கிற்று. நம்பாடுவான் பின்னர்ப் பொழுதும் விடிந்து ஜாகரவிரதத்தையும் தலைக்கட்டினவளவிலே அந்த நிர்மலமான காலையில் எம்பெருமான்பக்கல் ஆத்மஸமர்ப்பணம்பண்ணித் தான் வெறுத்தொழிக்கத்தக்கதான "தீண்டாவழும்புஞ் செந்நீருஞ் சீயு நரம்புஞ் செறிதசையும், வேண்டா நாற்ற மிகுமுடல்" † கழிகையில் உண்டான களிப்பாலே கடிது மீண்டான்.

திருமாலைப் பரவி நம்பாடுவான் இங்ஙனம் மீண்டு, முன் எம்பெருமான்பக்கல் பாடப்போன துரிதத்திலும் இரட்டிப்புத்துரிதத்தொடும் செல்கின்றான். இப்படி நடக்கின்றவன்முன்னம் ஒருவன் வந்துநின்று, "சண்டாள! நின் நடையைக் கண்டவாறே முன்போலன்றி அறக் கடுகியிருந்தது. நீ இங்ஙனம் எங்குச் செல்கின்றாய்? உன்உள்ளம்

* அழகர்கலம்பகம், க.

† திருவரங்கக்கலம்பகம், கஎ.

எங்குப் பொருந்தியுள்ளது? இதனை எனக்கு உண்மையாக உரைக்க'' என்று இனிதாக வினவினான். ஸத்யவ்ரதனான நம்பாடுவானும் அந்தப்புருஷனது மொழியைச் செவியுற்று அன்னானை நோக்கி, "பிரமராக்கதனொருவற்கு முன்பே சூளுரைத்துப் போந்தேன். அவன் எங்கு நின்றானோ அங்குச் சென்றடைதற்கு அவாவுகின்றேன். அவன் முன்பு நின்ற குறித்த இடத்து அவனைக் கண்டிலேனாயின், அன்னான் நின்ற இடத்தைத் தேடிப்போயாவது அடையக் கடவேன்'' என்று இனிதாக இசைத்தான். அருள்சுரந்த கண்ணினனாகிய அந்தப்புருஷன் அந்தப் புலையன்சொல்லைக் கேட்டபின்னர் அவன்றன்கருத்தைச் சோதிக்கக் கருதியவனாய் அவனை நோக்கி, 'அடா புலையா! ஸாதுவே! நல்விரதம் பூண்டோய்! சாதியினால் இராக்கதனாய் விபீஷணனைப்போல் தார்மிகனுமாயிருக்கையன்றிப் பாவியுமாய், அதிலும் உடல் கொண்டு தப்பிப்போகவொண்ணாதபடி அடியேதொடங்கி ஊனுண்ணுபவனாய், அவனை நீ கொன்றுபோகவியலாதபடி பலவானுமாயிருப்பானொருவன் உள்ள இடத்திற்கு நீ போகக்கடவையல்லைகாண். நீ இந்நெறி செல்லேல்'' என்று நேயத்துடன் நிகழ்த்தினான்.

ஸத்யவாதியான நம்பாடுவானும் அவனுரையைச் செவியுற்றோர்ந்து, சத்தியத்தை விட்ட ஜாகரவிரதத்திற்கு நற்பயனில்லையெனக் கருதி, முத்தியெய்துதற்குப் பகையாகிய முடையுடலை ஒழித்தலில் நிச்சயத்தைச் செய்தவனாய், "நீர் தெள்ளியீர்போன்றுள்ளீர். நீர் நிகழ்த்திய சொல் மாறாகவுள்ளது. நீர் கூறியவாறு புரியமாட்டேன்.

" யா மெய்யாக் கண்டவற்றுளில்லை யெனைத்தொன்றும் வாய்மையி னல்ல பிற'' *

* திருக்குறள், வாய்மை, ௧0.

யான் சத்தியத்தைக் கெடுப்பதில்லை. இது எனது திடமான விரதம். யான் உண்மைநெறியின் பிறழினும் எனது இயல்பு உண்மைநெறியின் பிறழாது. "பொய்ம்மை மொழி புகன்றறியேம் புகல மனமெண்ணுகினு, மெய்ம்மை யல துரையா நா;" * பயிற்சியின்மையான். யான் அறத்தைத் துறந்து ஒருகாலும் திரும்புவதில்லைகாண்.

"சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
  காக்க மெவனோ வுயிர்க்கு." †

"அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
  மறத்தலி னூங்கில்லை கேடு." ‡

"பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
  செய்யாமை செய்யாமை நன்று." ¶

என்பவாதலால் யான் பொய்யுரை புகல்கிலேன். உமக்கு நமஸ்காரம். போம்" என்று மதுரமாக மொழிந்தான் இங்ஙனம் இயம்பிய நம்பாடுவானை நோக்கிக் கமலக்கண்ணனை அவன் [திருமால்], இவன் இன்னுயிரினும் சத்தியத்தை ஒம்பக்கடவேனென்று உரைத்ததனால், "என் ஆணை வல்லன்" § என்று உள்ளமுவந்து, "அமலங்களாகவிழிக்கும்" என்றவாறு நம்பாடுவானைப் பாடவரக்காட்டின பிரமராக்கதனது ஆபத்தும் நம்பாடுவானது ஆபத்தும் அகலுமாறு பூர்ணகடாக்ஷம்பண்ணி, "உனக்கு மங்களமுண்டாகுக" என்று திருவாய்மலர்ந்தருளி அவனுக்கு விடைகொடுத்தான்.

---

* நைடதம், அன்னத்தைத் தூதுவிட்டபடலம், அஅ.

† திருக்குறள், அறன்வலியுறுத்தல், க.

‡ ௸ ௸ உ.

¶ ௸ வாய்மை, எ.

§ கம்பராமாயணம், யுத்தகாண்டம், இரணியன்வதைப்படலம், கஎ௦.

இங்ஙனம் புருஷோத்தமனால் விடைகொடுக்கப்பெற்றவனும், கொண்டநோன்பு குறையுறுமோவென்றுஐயமும் அச்சமும் உடையவனுமாகிய அந்த நம்பாடுவான், ஸத்தியத்தைத் தலைக்கட்டத் துணிந்து, விரைந்துசென்று, பிரமரக்ஷஸ் உள்ள இடத்தின் அருகிற் சேர்ந்து, புலையூனுண்ணும் அவ்விராக்கதனை நோக்கி, "பிரமராக்ஷதனே! உன்னால் அன்புடன் அனுமதிகொடுக்கப்பெற்றுப்போன நான் பிராமணனநுஜ்ஞையைப் பெற்றுப் போனவனாதலான், "உலகம்யாவையுந் தாமுள வாக்கலு, நிலைபெறுத்தலு நீக்கலு நீங்கலா, வலகிலா விளையாட்டுடையா" * ரும், லோகநாதனும், எங்கும்பரந்தவனுமாகிய எம்பெருமானை, நான் வேண்டியபடி இசைபாடி உகப்பித்து, விருப்பம் நிறைவேறப்பெற்றவனானேன். நீ "காலத்தினாற் செய்த நன்றி" † மறக்கத்தக்கதொன்றன்று. பெரியோய்! யான் வித்தனாக வந்திருக்கின்றேன். நீ என்னுடலிலுள்ள இந்த உறுப்புக்களை இஷ்டப்படி பிரித்து உண்டு தாகம்தீர உதிரத்தைப் பருகி மனோரதத்தைப் பூர்த்திசெய்துகொள்; சபதம் கூறிச்சென்றவாறு நின்னிடத்து யான்வந்துவிட்டேன். இவ்வென் புலையுடலினாலும் ஒருவரைத் திருப்திசெய்விக்கக்கூடுமென்று யான் கனவிலுங் கருதிலேன். நான் என்னைப் பெரிய பாக்கியசாலியென்று கருதுகின்றேன். உன்னைத் திருப்திசெய்விப்பதில் எனக்கு ஆசை மேலிடுகின்றது. நான் நல்லுலகை எய்துவேன்" என்று இனிதாக உரைத்தான். இங்ஙனம் நம்பாடுவான் நவின்ற நயவுரையைக் கேட்டுப் பயங்கரனான அந்தப் பிரமராக்கதன், விரதநிச்சயமுடையவனாகிய அவனை நோக்கி, 'நல்லோய்! மங்களகர

---

* கம்பராமாயணம், சிறப்புப்பாயிரம், க.

† திருக்குறள், செய்ந்நன்றியறிதல், உ.

மான குணங்களை யுடையவனே! நீ கல்வியறிவில்லாத சண்டாளனாயினும் உன்னால் தருமமும் ஸத்தியமும் காக்கப் பட்டன. புலையனான உனக்கு உள்ள தத்துவஞானத்தைக் குறித்து உள்ளம் மிகவும் உவப்புற்றவனானேன்'' என்று இனிதாகவுரைத்தான். அதனைக்கேட்டு நம்பாடுவான் அச்சந்தரும் உடலையும் பயங்கரமான பார்வையையுமுடைய பிரமராக்ஷஸனை நோக்கி, "பிரமராக்கதனே! நான் புலையனாலும் மறத்தொழிலினின்று நீங்கியவன். நான் மெய்யே சொல்வது. இது நிச்சயம்'' என்று இனிதுமொழிந்தான்.

அதனைக் கேட்ட பிரமராக்கதன் அச்சண்டாலனை நோக்கி, 'மஹாநுபாவனே! நீ உயிர்வாழ்க்கையை விரும்பினால் இன்றிரவிற் றிருமாலைத் திருப்பள்ளியுணர்த்திப் பாடிய கீதத்தின் பயனை எனக்குக் கொடுத்திடு; நீ இனிது நின்னிடம் சென்றடைந்து வாழலாம்'' என்றான். பின்பு அதற்கு நம்பாடுவான் மறுமொழிநவில்வான்:— "நீ முன்னம் சொன்னவண்ணமே நானும் சத்தியம்தவறாமல் வந்துவிட்டேன். நீயும் முன்னம் விரும்பிக்கூறியவாறே என் சரீரத்தைத் தின்னு. மற்று, நான் கீதபலத்தைத் தருவதில்லைகாண்.'' நம்பாடுவான் ஏதுவோடும் இயம்பிய மொழியைப் பிரமராக்கதன் கேட்டுப் பின்னர் மறுபடியும் இனிதாக ஒருசொற் கூறுவான்:— "சான்றோய்! இசையின் பயன் முற்றுந் தராவிடினும், அதன் அரைப்பகுதியையாயினும் எனக்கு ஈயாய்: பின் பயங்கரமான இந்தப் பக்ஷணத்தினின்று நின்னை விடுவிக்கின்றேன்.'' அதற்கு நம்பாடுவான் செம்மையானவுரையொன்றுசெப்புவான்:— "முன்பு எனது உடலை உண்பேனென்று அறுதியிட்டு உரைத்தாய். ஆயின் உரைத்தபடி என்னுடலை உண்டிலை; இப்போது கீதத்தின்பலனைக் கேட்கின்றாய். நான் கீதத்தின்

பலனைக் கொடுக்கமாட்டேன். வேறு என்ன விரும்புகிறாய்? சொல்," பிறகு கொடுஞ்செயலுடைய பிரமராக்கதன் சொல்வான்: "இரவின் ஒருயாமத்து இசையினது புண்ணியமான பலனையாகிலும் கொடுக்க. அப்படி கொடுத்தாயாயின் நீ நின் மக்களொடும் மனைவியொடும் சுற்றத்தொடும் மற்றும் பிரியர்களோடும் க்ஷேமமாகக் கூடுமாறு நின்னை விடுதல்செய்வோம்" திடவிரதனும், தீரனும், எம்பிரானை இசைபாடி மகிழ்வித்துப் பக்தியால் உள்ளம் உருகுபவனுமாகிய நம்பாடுவான் இராக்கதனது சொற்களைச் செவியுற்று, "அரக்க! நீ விரும்புகிறபடி ஒருயாமத்திற் பாடிய கீதத்தின் பலனையும் தருவதில்லை. நீ முன்னம் மொழிந்த வண்ணம் இசையேபோல் * இராகமாகவிருக்கிற என்மிடற்றுதிரத்தைப் பருகு" என்றான். இங்ஙனம் இயம்பிய நம்பாடுவானது இனியவுரையைக் கேட்டு மாமிசபோசனப்பிரியனான இராக்கதன், இவன் இன்னுயிரை மாறிக் கொடுத்து வாய்மை பிறழாமல் நின்றவனாகையாலும், இன்னுயிரினும் இசையின் பிரபாவம் சிறந்ததென்று அறிந்தவனாகையாலும், இவன் எல்லாவற்றினுடைய வேறு பாட்டையும் அறிவானென்று அறுதியிட்டு, சத்தியவானும், குணவானுமாகிய அவனை நோக்கி உரைப்பான்:— "நீ விஷ்ணுஸந்நிதியிற் பாடிய கீதங்களில் ஒன்றின் பயனையேனும் அருளுடன் ஈந்து அந்தக் கீதபலப் பிரதானத்தால் நீசனான என்னை இந்த இராக்கதசன்மத்தினின்று உய்வித்தருளவேணும்" என்று அந்தப்புண்ணியனான புலையனைச் சரணமடைந்தான்.

---

* இராகம் என்பதற்கு ஆசை, கீதம், செம்மைநிறம் என்னும் பொருள்கள் உண்டு.

பாதியா யழுகிய கால்கைய ரேனும்
பழிதொழிலு மிழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியா யரவணையா னென்ப ராகில்
அவரன்றோ யாம்வணங்கு மடிக ளாவார்
சாதியா லொழுக்கத்தான் மிக்கோ ரேனும்
சதுர்மறையால் வேள்வியாற் றக்கோ ரேனும்
போதினன் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர் தாமே"*

என்பது ஆன்றோரமுதவாக்காகலான், நீ புலையனேனும் ஞான பக்தி வைராக்கியங்களை உடைமையின் நீயே எனக்குத் தஞ்சம்" என்று மற்றும் போற்றினன். இவ்வாறு சரண்புக்க பிரமராக்கதனைச் சத்தியப்பிரதிஜ்ஞனை நம்பாடுவான் பார்த்து, "அரக்க! அங்ஙனமேயாகின்றது. நீ முன்னம் எந்தத் தீவினையை இழைத்தனை? எக்கருமத்தின் குற்றத்தான் இவ்விராக்கதவுடலை எய்தினை?" என வினவினன். என்றிங்ஙனம் நம்பாடுவானால் கேட்கப்பட்ட பிரமராக்கதன், அப்புண்ணியனது பொன்னடிபுகுந்தவுடனே முற்செய்தி நினைவுகூர்ந்து, தழுதழுத்த குரலோடும் இதனை உரைப்பான்:—

"மாதங்கனே! யான் முன்பு சரககோத்திரத்திலே ஸோமசர்மா என்றொரு பிராமணனாய்ப் பிறந்தேன்: எல்லாப்படியாலும் வேள்வியை நான்முறைபிறழப்பண்ணினேன்: ஸூத்திரமந்திரத்திற் குலைந்து யூபகருமத்தில் நிஷ்டனாய் லோப மோஹங்களாற் பீடிக்கப்பட்டு ஒரு வேள்வி புரியுங்கால், அதனிடையே சூலதோஷமென்ப தொன்று உண்டாயிற்று. பின்பு பஞ்சமராத்திரியில், சிறந்த

---

* திருவரங்கக்கலம்பகம், கரு.

அவ்யாகம் முடியாமலிருக்கையில் நான் பஞ்சத்துவத்தை* எய்தினேன். நிறைவேறப்பெருத அந்த யாகத்தின் தோஷத்தினுல் யான் இவ்வரக்கவுருவத்தை உற்றேன். உயிர்கண்மாட்டு இயல்பின் அருளுடைய நீ, கீதமகிமையினுல் இத்தீப்பிறவியினின்று என்னை மீட்டுக் காத்தற்கு உரியாய்.''

இவ்வுரையைக் கேட்ட நம்பாடுவான் இரக்கமுற்று, 'நன்று; அப்படியே' என்று கூறி, மற்றும், 'என்னுற் பாடப்பட்ட பச்சிமமானகீதத்திற்கு உத்தமமான **கைசிகம்** என்றொரு ஸ்வரம் உண்டு. அந்தப் பண்ணின் பலத்தினுல் நீ பாபத்தினின்று நீங்குவாய்'' என்று இனிதாக உரைத்து, ஸூர்யகுலதிலகனுன சக்கரவர்த்தித்திருமகன் ஸ்ரீவிபீஷணுழ்வானுக்குப்போல் அந்தப் பிரமராக்ஷஸனுக்கு அபயப் பிரதானம்பண்ணியருளினுன்.

ஸ்ரீபகவான் பூமிப்பிராட்டிக்கு இவ்வரலாற்றை உரைத்தருளுகையில், "யாவனொருவன் நம்முடைய சன்னிதியில் திருமுன்பே கைசிகமென்னும் பண்ணைப் பக்தி பரவசனுய்ப் பாடுகின்றுனே, அவன், நம்பாடுவான் ராக்ஷஸனை உத்தரிப்பித்தாற்போல், தன்னை ஆசிரயித்தவர்களையும் உத்தரிப்பிப்பான்'' என்று அருளிச்செய்திருக்கிறுர்.

இவ்வாறு நம்பாடுவான் பக்கல் வரம்பெற்ற சீர்த்தியுடைய ஸோமசர்மாவென்னும் பிரமராக்ஷஸன், அப்போதே அந்தக் கொடிய யாகசாபத்தினின்று முக்தனுய், விகாரமான அவ்வுடலைத் துறந்து, ஆகாயத்திற் சரற்கால

---

* பஞ்சத்துவம் - மரணம்.

சந்திரனைப்போல் பூமியில் மாசற்ற உயர்ந்த அந்தணர்மரபில் விளக்கமுறப் பாகவதனாய்ப் பிறந்து, குற்றமற்ற அறிவுடையவனாய், எம்பெருமானால் கட்டளையிடப்பட்ட நல்ல வைதிக கருமங்களைக் குறைவறச் செய்தலில் ஊக்கமுடையவனாய்த் திருமாலுக்குக் குற்றேவல்செய்து உய்ந்தான்.

நம்பாடுவானும், பின்பு அநேககாலம் திருக்குறுங்குடிநம்பிக்கு இசைபாடிக்கொண்டும், குற்றமற்றதொழில்களைப் புரிந்துகொண்டும் இருந்து, ஸர்வஸங்க பரித்யாகம் பண்ணிப் பரிதிமண்டலத்தூடேசென்று விரஜைநதிகடந்து நித்தியசூரிகள் எதிர்கொண்டேத்த,

"சிறுகாலையிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம் வேறுபடா
உறுகால் கிளர்பூதமெலா முகினும்
மறுகா நெறி" *

யெய்தி, "சூழ்ந்திருந் தேத்துவர் பல்லாண்டே" † என்றபடி பெரியவீட்டிலே திருமாலுக்குப் பல்லாண்டுபாடிக்கொண்டு பேரின்பமுற்றிருந்தனன்.

நம்பாடுவோன் சரித்திரம் முற்றிற்று.

---

* கம்பராமாயணம், சரபங்கர் பிறப்புநீங்குபடலம், ௨௦.
† பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு, ௧௨.

A FEW OPINIONS—(Cont.)

"Although the stories of Prahlada and Markandeya are as old as our literature, in your books they are presented in eligant chaste Tamil. Your books are also calculated to be of use to students of Tamil composition who ought to know how to write successfully narrative and descriptive pieces. I have recommended your Vyasakkovai (Modal essays in Tamil) to my students."—S. ANAVARATAVINAYAKAM PILLAI ESQR., M.A., CHRISTIAN COLLEGE, MADRAS.

"Markandeya Charitram is as good as your Prahlada." —T. CHELVAKESAVARAYA MUDALIAR ESQR., M.A., PACHAIAPPA'S COLLEGE, MADRAS.

"தேவரீர் அனுப்பிய ஸ்ரீ பிரகலாதாழ்வான் சரிதையைப் படித்துப்பார்த்ததில் தேவரீரது தமிழ்க்கல்வியின் முதிர்ச்சியைத் தெரிந்து மகிழ்ந்தேன். * * * * * தமிழில் நல்லநடையில் (அமைந்த சிறந்த நூல்) * * * * * தேவரீரது பிரகலாத சரித்திரத்தை என் மாணக்கர்க்கேயன்றி என் குழந்தைகட்கும் கொடுத்துப் படிக்கச் செய்கிறேன்." — ஸ்ரீ. உ. வே. கா. ஸ்ரீ. கோபாலாசாரியர், தமிழ்ப்பிரதம பண்டிதர், கிரிஸ்டியன் காலேஜ், சென்னை.

மன்பதையாற்றுப்படை

"இப்பெயர்கொண்டதொரு சிறுநூல், வேலூர் வூர்ஹீஸ் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் பு. க. ஸ்ரீனிவாஸாசாரியரவர்களால் இயற்றப்பட்டது. இது, "பள்ளிகொண்டை யென்னும் உத்தர ஸ்ரீரங்கஸ்தலத்துத் திருமாலை வணங்கியுய்ந்தானொருவன், அங்ஙனம் வணங்கி உய்வுபெறாத மக்கட் பரப்பை, அப்பெருமானிடத்தே ஆற்றுப்படுத்தலைக்" கூறுவது. இந்நூலின் சொன்றேக்குப் பொருணோக்கங்கள் நன்கமைந் தொளிர்தலோடு, இதன் ஆசிரியர் ஒரு சிறந்த பக்திமானென்பதும் இந்நூலால் விளங்குகிறது.—" செந்தமிழ்.

பிரகடனம்

	ரூ. அ. ப.
வியாசக்கோவை	0—8—0
பிரகலாதாழ்வான் சரிதை	0—6—0
பஞ்சதந்திரவசனம் அரும்பதவுரையுடன் ...	0—6—0
ஷை மூலம்	0—4—0
வில்லிபுத்தூரார்பாரதம், கிருஷ்ணன்தூதுசருக்கம்	0—4—0
மார்க்கண்டேயசரிதம்	0—4—0
சம்பகமாலினி	0—4—0
குலசேகரன்	0—4—0
இடைக்காடர் சரித்திரம், திருவள்ளுவர் சரித்திரம்	0—3—0
விசயத்தவசியும், சிவவேடனும்	0—3—0
ஸ்ரீவாமனசரித்திரம்	0—2—0
நம்பாடுவான் சரித்திரம்	0—2—0
மன்பதையாற்றுப்படை	0—2—0
திருக்கச்சித்தேப்பெருமாளந்தாதி	0—2—0
தனிப்பாநாற்பது	0—2—0
பிரணவப்பொருளறியாத பிரமன்	0—1—6
குமரேசசதகம் (சாரமாகத்தேர்ந்தெடுத்த செய்யுள்களின் திரட்டு) அரும்பதவுரையுடன் ...	0—2—6
திருவேங்கடசதகம் ஷை	0—2—0
அறப்பளீசுரசதகம் ஷை	0—2—0
விவேகசிந்தாமணி ஷை	0—1—6
பத்மினி: ஓர் இனிய உண்மைக்கதை ...	0-12—0
ஹஸ்தரேகை சாஸ்திரம்	2—0—0

இப்புத்தகங்கள் கிடைக்கக்கூடிய இடங்கள்:—

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்,

தமிழ்ப்பிரதமபண்டிதர், காலேஜ், வேலூர்.

ரிப்பன் புஸ்தகசாலை, 87, *தம்புசெட்டிவீதி*, சென்னை.

ம-௱-௱-ஸ்ரீ. D. K. சுப்பைய நாயுடு அவர்கள்,

புஸ்தக வியாபாரிகள், தஞ்சாவூர்.

ம-௱-௱-ஸ்ரீ. மு. கருப்பண பிள்ளையவர்கள்,

புஸ்தகவியாபாரிகள், புதுமண்டபம், மதுரை.